REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk / ThinakaranLK
2020 நவம்பர் 13 வெள்ளிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
வரு. 88 இல. 270 | November 13,Friday, 2020 | 24 பக்கங்கள் | 30/-

## இலங்கையில் முதலாவது ட்ரோன் படையணி பிரிவு



இலங்கை இராணுவத்தில் ட்ரோன் படையணி ஒன்று ஆரம்பிக்கவுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். நிலத்தை கண்காணிக்கும் விடயத்தில், இந்த ட்ரோன் படையணியின் ஒத்துழைப்பை இராணுவத்தினர் பெற்றுக்கொள்வர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். 06



அம்பாறை, பொத்துவிலில் அமைந்துள்ள முஹுது மகா விகாரைக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் (2020.11.11) கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார். குறித்த கண்காணிப்பு விஜயத்தை தொடர்ந்து சுற்றுலாத் தலமாக விளங்கும் அறுகம்பே பிரதேசத்தில் கடலரிப்பினால் பாதிப்புக்குள்ளாகும் பிரதேசத்தையும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பார்வையிட்டார்.



## 2021 பட்ஜெட் விவாதம் 21 நாட்கள்

சபை நிருபர்கள்

2021 வரவுசெலவுத்திட்ட விவாதம் 21 நாட்கள் இடம்பெறும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (12) பாராளுமன்றத்தில் அறிவித்தார். நேற்று முன்தினம் (11) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் வரவுசெலவுத்திட்ட விவாதத்துக்கான தினங்கள் தீர்மானிக்கப்பட்டன.

வரவுசெலவுத்திட்ட விவாதங்கள் 19 தினங்கள் நடைபெறும் என 06

## 3.5 கிலோ சூலக கட்டியை அகற்றி கல்முனை மருத்துவர்கள் சாதனை!

கல்முனையில் பெண்ணொருவரிடம் இருந்து 3.5 கிலோ சூலக கட்டியை மருத்துவர்கள் அகற்றியுள்ளனர். கல்முனையில் டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை மருத்துவர்களே இந்த அறுவை சிகிச்சையினை வெற்றிகரமாக செய்துள்ளனர். பெண்ணியல் மகப்பேற்று வைத்திய



நிபுணர் டாக்டர் ரசின் முஹம்மட் மற்றும் மயக்கவியல் வைத்திய நிபுணர் டாக்டர் தவகுமார் உள்ளிட்ட குழுவினர்களே இக்கட்டியினை அகற்றியுள்ளனர். நேற்றுமுன்தினம் அறுவை சத்திரசிகிச்சை மூலம் 3.5kg நிறையான சூலகத்தில் இருந்த கட்டி வெட்டி அகற்றப்பட்டது.



### கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் நாட்டில் காணப்பட்ட

# சமூக பொருளாதார அழிவுகளை மீட்டெடுப்பதே அரசின் நோக்கம்



ஷம்ஸ் பாஹிம், நிரோஷன் சுப்ரமணியம்

கடந்த 5 வருட காலப்பகுதியில் காணப்பட்ட சமூகப் பொருளாதார அழிவுப் பாதையை மாற்றியமைப்பதே அரசாங்கத்தின் வரவு செலவுக் கொள்கையின் உள்ளடக்கம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

வலுவான பொருளாதார திட்டங்களை முன்னெடுத்ததன் காரணமாக 2020ஆம் ஆண்டிற்கான வெளிநாட்டு கடன்களை செலுத்த முடிந்துள்ளது. அரசாங்கம் தேவையற்ற இறக்குமதி காருக்கு தடை விதித்துள்ளன், தேவை



### வரவு - செலவு திட்டத்தின் உள்ளடக்கத்தை விளக்கி பிரதமர் சபையில் உரை

யற்ற வெளிநாட்டு கடன்களை இடை ... உள்ளது என்ற எண்ணத்தை ஏற்படுத்




## மேல் மாகாணத்திலிருந்து வெளி... சென்றவர்கள் தனிமைப்படுத்தலுக்...

### சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்து நடவடிக்கை



லோரன்ஸ் செல்வநாயகம்

மேல் மாகாணத்தில் பயணத் தடை விதிக்கப்பட்ட பின்னர் அங்கிருந்து வெளி மாவட்டங்களுக்கு சென்றவர்களை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் இது குறித்து அறிவித்துள்ளதாக பிரதி பொலிஸ்மா அதிபர், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். எவரேனும் 06

நாட்டின் மொத்த கொவிட் 19 இறப்புகளில் ஐந்து மட்டுமே கொவிட் 19 ஆல் ஏற்பட்டவை எனவும் மற்ற அனைத்தும் நாட்பட்ட நோய்களால் ஏற்பட்டவை எனவும் இராணுவத் தளபதி சவேந்திர



சில்வா இன்று தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் செயலாளர் இதை உறுதிப்படுத்தியதாக இராணுவத் தளபதி கூறியுள்ளார்.

கொவிட் 19 நோயாளிகள் வீடுகளில் இறந்தது குறித்து கருத்து தெரிவித்த அவர், நாட்பட்ட 06

## பாராளுமன்றத்தின் அனுமதியின்றி சட்டவிரோதமாக நிதி பயன்பாடு

### எம்.ஏ.சுமந்திரன் எம்.பி சபையில் குற்றச்சாட்டு



ஷம்ஸ் பாஹிம், நிரோஷன் சுப்ரமணியம்

அரசியலமைப்பிற்கு முரணாகவே அரசாங்கம் அரச நிதியை பயன்படுத்தி வருவதாகவும் இதற்கு பாராளுமன்ற அனுமதி பெறப்படவில்லை எனவும் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது தவிர தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் இராணுவ தளபதியால் வழங்கப்பட்டு வரும் உத்தரவுகளுக்கான அதிகாரம் எந்த சட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார். 06

## 600 பொலிஸாருக்கு கொரோனா தொற்று

நாட்டில் 600 பொலிஸ் அதிகாரிகள் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சுமார் 3000 பொலிஸ் அதிகாரிகள் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் இருந்தே இந்த கொரோனா தொற்றாளர்கள் பதிவாகின்றனர்.

தற்போது இலங்கையில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை 06

## புகையிரத கட்டணங்களில் எவ்வித மாற்றமுமில்லை

### ரயில்வே திணைக்களம் அறிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டாலும் ரயில் கட்டணங்களில் எந்தவித மாற்றமும் கிடையாது என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

தனியார் பஸ் கட்டண அதிகரிப்பையடுத்து இலங்கை போக்குவரத்து சபையும் பஸ் கட்டணத்தை அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ள நிலையில் 06

## கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை 15,627 ஆனது

### நேற்று இருவர் மரணம், இதுவரை 47

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 627 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. நேற்றையதினம் வைரஸ் தொற்று காரணமாக மேலும் இருவர் மரணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

46 மற்றும் 64 வயதுடையவர்களே இவ்வாறு மரணமடைந்துள்ளதாக அமைச்சு தெரிவித்தது. 06

### தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின்

## பொதுச் செயலாளர் பிரசாந்தன் நேற்று CID யினரால் கைது

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான பூபாலபிள்ளை பிரசாந்தன் CID யினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரை எதிர்வரும்



23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்று அவரது வீட்டில் வைத்து பிரசாந்தன் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆரையம்பதியில் இடம்பெற்ற 06